செய்தி வெளியீடு – 459 நாள்–23.7.2007

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் புதிய உதவிப் பொறியாளர்களுக்கு பணி நியமனம் ஆணையினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

-----

கழக அரசு மீண்டும் பதவியேற்ற பின்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினை நிறுவிய தலைவர் கலைஞர் அவர்களின் ஆணைப்படி வாரியத்தில் பல ஆண்டுகளாக முந்தைய அரசால் முடக்கி வைக்கப்பட்ட சலுகைகள் மற்றும் பதவி உயர்வுகளை வழங்கிட ஆணை பிறப்பித்ததன் பயனாக பல நலத் திட்டங்கள் குறுகிய காலத்திலேயே திரும்ப வாரிய பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது. அதன்படி,

- 858 தொகுப்பு ஊதியப் பணியாளர்கள் கால முறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.
- 173 மதிப்பூதிய பணியாளர்களின் வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதி முதலிய வரைமுறைகளை தளர்த்தி தொகுப்பூதியப் பணியாளர்களாக மாற்றி உத்தரவிடப்பட்டது.
- 20 ஆண்டுகள் விபத்தின்றி பணியாற்றிய 54 ஊர்தி ஓட்டுநர்களுக்குத் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.
- 10 ஆண்டுகள் விபத்தின்றி பணியாற்றிய 33 ஊர்தி ஓட்டுநர்களுக்கு தேசீய சேமிப்புப் பத்திரம் வழங்கப்பட்டது.
- த.கு.வ.வாரியத்தில் பணிபுரியும் சி மற்றும் டி பிரிவு பணியாளர்களுக்கு கடந்த ஆட்சியால் வழங்கப்படாத 2004 - 05 ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் அன்பளிப்புத் தொகை 28.8.2006 லும், 2005 - 06ஆம் ஆண்டிற்கான போனசும் மொத்தம் சுமார் 2 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இதனால் சுமார் 8,000 பணியாளர்கள் பயனடைந்தார்கள்.
- 25 ஆண்டுகள் மாசற்ற பணி முடித்த 6 அலுவலர்களுக்கு கிசான் விகாஸ் பத்திரங்கள் வழங்கப்பட்டது.
- ஐந்து ஆண்டு காலமாக பதவி உயர்வுகள் வழங்கப்படாதிருந்த பல பிரிவு பணியாளர்களுக்கும், பொறியாளர்களுக்கும் விதிமுறைகளின்படி 432 நாட்களில் 528 நபர்களுக்கு, பதவி உயர்வு வழங்கப்பட்டது.

மேலும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாவட்டங்கள் தோறும் ஆய்வுகள் மேற்கொண்டு, பணிகள் செவ்வனே துரிதமாக நடைபெற அறிவுறுத்தியதற்கிணங்க, பெரிய குடிநீர் திட்டமான இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை துரிதமாக செயல்படுத்திட இரண்டு வட்ட அலுவலகங்கள் மற்றும் நான்கு கோட்ட அலுவலகங்கள் உருவாக்கப்பட்டது.

இதைப்போல ஊரகக் குடிநீர் திட்ட வேலைகள் துரிதமாக செயல்படுத்திட திருவள்ளூர் மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டியிலும், காஞ்சீபுரம் மாவட்டத்தில், செங்கல்பட்டிலும் இரு ஊரகக் குடிநீர்த் திட்டக் கோட்டங்கள் புதியதாக உருவாக்கப்பட்டது. இப்புதிய வட்டங்கள் மற்றும் கோட்டங்கள் உருவாக்கப்பட்டதால் மேலும் பொறியாளர்களுக்கும் மற்றும் பணியார்களுக்கும் பதவி உயர்வு பெற்றிட வழி வகை செய்தது.

குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள்ளும், தரத்துடனும் திட்டங்களை செயல்படுத்தத் தேவையான எண்ணிக்கையில் உதவிப் பொறியாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டியது அவசியம் . இதனடிப்படையில் நடப்பு ஆண்டில் **100** உதவிப் பொறியாளர்கள் காலியிடங்கள் விதிமுறைகளின்படி நிரப்பப்படும் என தமிழக சட்டமன்றப் பேரவையில் **12.04.2007** அன்று நடைபெற்ற நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து முதற்கட்டமாக வாரிய விதிமுறைகளின்படி வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக புதியதாக பணி நியமனம் செய்யப்படும் 19 உதவிப் பொறியாளர்கள் மற்றும் வாரியத்தில் கீழ் நிலை பதவிகளில் பணியாற்றி வரும் பணியாளர்களில் தகுதி வாய்ந்த வரைவாளர்கள், தொழில் நுட்ப உதவியாளர்கள், மின் கண்காணிப்பாளர்களில் **67** நபர்களுக்கும் **1:2** என்ற விகிதாசாரத்தில், உதவிப் பொறியாளர்களாக தேர்வு செய்யப்பட்டனர். இதற்கான பணி நியமன ஆணையினை **23.07.2007** அன்று காலை **09.00** மணியளவில் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணை வழங்கும்போது, திரு கே. தீனபந்து, இ.ஆ.ப., அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தலைமைச் செயலகம், சென்னை 9, திரு ஸ்வரண்சிங், இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் வாரிய அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.